## 45– ஆம் ஆண்டில் கம்பீரமாக அடியெடுத்து வைக்கும் கழக இளைஞர் அணி!

# நம் முன் காத்திருக்கும் பணிகள் ஏராளம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஜூலை 21–**

**கழக இளைஞர் அணி தொடங்கி 45–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை யொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விடுத்துள்ள அறிக்கையில் ஆற்றிய பணிகளை பட்டிய லிட்டு இனி ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து சூளுரைத்துள்ளார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்க ளின் அறிக்கை வருமாறு:**



திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி தொடங்கப்பட்டு, 44 ஆண்டுகள் நிறைவடைந்து, 45ஆம் ஆண்டில் அடி யெடுத்து வைக்கிறது.

கோபாலபுரத்தில் உள்ள ஒரு முடிதிருத் தகத்தில் இன்றைய கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர் களால் தொடங்கப்பட்ட `கோபாலபுரம் இளைஞர் தி.மு.க'தான் 1980இல் மதுரை ஜான்சிராணி பூங்காவில் இளை ஞர் அணி என்னும் அதிகாரப்பூர்வ அணியாக மாறியது.

**1982இல் முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களால் மாநில இளை ஞர் அணிச் செயலாளராக நியமிக் கப்பட்ட இன்றைய கழகத் தலை வர் அவர்கள், தன் இடைவிடா உழைப்பின் மூலம் கழக இளை ஞர் அணியை வலிமை வாய்ந்த ஆற்றல்மிக்க அணியாக உருவாக் கினார்.**

### அன்பகத்தை தலைவர் கழக இளைஞர் அணி வசமாக்கினார்!

தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, பல்வேறு நிகழ்ச்சி களில் கலந்துகொண்டு, அதன் மூலம் நிதி திரட்டி கழகத்தலைமையிடம் ஒப்ப டைத்து, இளைஞர் அணியின் தலை மையகமான அன்பகத்தை அணியின் வசமாக்கினார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் ஆட் சியின் சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்வதாக இருந்தா லும், கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது அன்றைய ஆளும் அரசுகளின் மக்கள்விரோதப் போக்கை உறுதியுடன் எதிர்ப்ப தாக இருந்தாலும், திராவிட இயக் கக் கொள்கைகளைப் பரப்புவதாக இருந்தாலும் இன்றைய கழகத் தலைவர் தலைமையில், இளை ஞர் அணி தொடர்ந்து முன்னணி யில் நின்றது.**

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட் டுதலில், இளைஞர் அணியில் பயிற்சி பெற்ற பலர் தலைமைக் கழக நிர்வாகிகளாக, மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்களாக, சட்ட மன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக ஏற் றம் பெற்றனர்.

### கழக இளைஞர் அணியின் வளர்ச்சிக்கு 30 ஆண்டுகள் உழைத்த தலைவர்!

30 ஆண்டுகள் இளைஞர் அணியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து உழைத்த கழகத் தலைவர் அவர்கள், கழகத்தின் செயல்தலைவராகப் பொறுப் பேற்ற பிறகு, மாநில இளைஞர் அணிச் செயலாளராக வெள்ளக்கோவில் சாமிநா தன் அவர்கள் பொறுப்பேற்று, சீரிய முறையில் பணியாற்றினார்.



இந்த நிலையில், **2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, கழகத் தினரின் வேண்டுகோளின்படி யும் தலைமைக் கழகத்தின் முடி வின்படியும் அதே ஆண்டு ஜூலை 4 அன்று மாநில இளை ஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றேன். இது, இன் றைய கழகத் தலைவர் அவர்கள் வகித்த பொறுப்பு என்பதை மன திலேந்திப் பணியாற்றத் தொடங் கினேன்.**

25 லட்சம் புதிய இளைஞர்களை கழ கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்தோம். இளைஞர் அணி உறுப்பினர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்தினோம். அன்று, நாம் எதிர்க்கட்சி என்றபோதிலும் அரசியலுக்கு அப்பாற்பட்டு கைவிடப்பட்ட நீர்நிலை களைத் தூர்வாரும் பணி யை மேற்கொண்டோம்.

### போராட்டங்களை முன்னெடுத்த இளைஞர் அணி!

குடியுரிமைத் திருத்தச் சட் டத்துக்கு எதிரான போராட் டம் முதல், நீட் தேர்வை ஒழிக்க கையெழுத்து இயக்கம் வரையி லான போராட்டச் செயற்பாடுகளை முன் னெடுத்தோம். இணையத்தில் கழகத் தின்மீது சுமத்தப்படும் அவதூறுகளை முறியடிக்க, சமூகவலைத்தளத் தன்னார் வலர்களை ஒருங்கிணைத்தோம்.

இதற்கிடையில் கொரோனா பெருந் தொற்று என்னும் உலகளாவிய நெருக் கடி. ஆனாலும், கொரோனா நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு மக்கள் துயர் துடைத்தோம்.

தொகுதிதோறும் திராவிட மாடல் பயிற் சிப் பாசறைக் கூட்டம், வாசிப்பை விரிவு படுத்த சட்டமன்றத் தொகுதிதோறும் `கலைஞர் நூலகம்', `முரசொலி பாச றைப் பக்கம்', `முத்தமிழறிஞர் பதிப்பகம்' என்று ஏராளமான பணிகளை முன்னெ டுத்திருக்கிறோம்.

குறிப்பாக, 2007இல் இன்றைய கழகத்தலைவரால் நெல்லையில் நடை பெற்ற இளைஞர் அணியின் முதல் மாநில மாநாட்டின் தொடர்ச்சியாக, 2024இல் சேலத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டை எழுச் சியுடன் நடத்திக்காட்டினோம். கழகத் தலைவரின் வழிகாட்டுதலும் இளைஞர் அணித் தோழர்களின் உற்சாகமும் ஒத்துழைப்புமே இவற்றைச் சாதித்துக் காட்டின.

கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி, ஒன்றியம் - நகரம் - பகுதி - பேரூர் வாரி யாக திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்துவது உள்ளிட்ட பணிகளுக்கு ஆயத்தமாகிக் கொண்டு இருக்கிறோம். இப்படி கழக இளைஞர் அணி ஆற்றிய பணிகள் ஏராளம் என்றா லும், காத்திருக்கும் பணிகளும் ஏராளம்.

### கழக இளைஞர் அணி ஆற்றிய பணிகள் ஏராளம்!

மூன்றாண்டு கால திராவிட மாடல் ஆட் சியின் மூலம் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. ஆனால், கல்வி, தொழில்வளர்ச்சி, மருத்துவம், உள்கட்டமைப்பு ஆகியவற்றில் தமிழ் நாடு பெற்ற வளர்ச்சியைச் சீர்குலைக்க வேண்டும், மக்களைப் பிளவுபடுத்தி, மத வாத, சாதியவாத வெறியூட்டி அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்று ஒரு புறம் பாசிச சக்திகள் காத்திருக்கிறார்கள்.

**இன்னொருபுறம், தி.மு.க எதிர்ப்பை மட்டுமே முதன்மை இலக்காகக் கொண்டு கழகத்தின் மீதும் திராவிட இயக்க முன்னோ டிகள் மீதும் திராவிட மாடல் ஆட் சியின் மீதும், அவதூறுகளையும் பொய்ச்செய்திகளையும் பரப்புவ தன் மூலம் தி.மு.கவை வீழ்த்த முடியும், என்று நினைக்கும் கய வர்களும் காத்திருக்கிறார்கள்.**

### 2026 சட்டமன்றத் தேர்தலிலும் மாபெரும் வெற்றியைக் குவிப்போம்!

**நமக்கோ 2026ஆம் ஆண்டு சட் டமன்றத் தேர்தல் களம் காத்திருக் கிறது. தொடர் வெற்றிகளைக் குவித்துவரும் கழகத்தலைவர் அவர்களின் தலைமையில், 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்த லிலும் வெற்றிபெற்று, திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும். அதன்மூலம் தமிழர் கள் வளம் பெற்று தமிழ்நாடு மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டும். இத்தகைய மாபெரும் கடமையை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு கழக இளைஞர் அணிக்கு இருக்கிறது.**

சதிகளை முறியடித்து சாதனை ஆட் சியை, மீண்டும் 2026இல் அமைக்க இளைஞர் அணியின் 45ஆம் ஆண்டு விழாவில் உறுதியேற்போம்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.